தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஆறாவது அறிக்கை

தொழில் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, வருவாய்த் துறை மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை

(பொதுப் பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 8 MAY 2008)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஆறாவது அறிக்கை

தொழில் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
வருவாய்த் துறை மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை

(பொதுப் பட்டியல்)

TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

		பக்கங்கள்
குழுவின் அமைப்பு	..	iii

அறிக்கை

1. முகவுரை	..	v
2. குழுவின் கூட்டங்கள்	..	v
3. பொதுக் குறிப்புரைகள்	..	vi

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

தொழில் துறை	1
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	4–54
வருவாய்த் துறை	57–84
வணிகவரி மற்றும் பதிவுத் துறை	87–113

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை	..	114–115

இணைப்பு–3

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	116–117

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY சத்யமேவ ஜெயதே TRUTH ALONE TRIUMPHS

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	:	துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன்	:	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து ஆறாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 07 மற்றும் 08 ஆகிய தேதிகளில் சென்னை–2 ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது.

3. மேற்படி குழுக் கூட்டத்தில் தொழில் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, வருவாய்த் துறை மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறைகளின் அரசுச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடி பேரவையில் மாண்புமிகு அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற தொழில் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, வருவாய்த் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறைகள் தொடர்பான 177 உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய பதிலறிக்கைகளை ஆராய்ந்து, அவற்றில் 68 உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றனவாகவும், 6 உறுதிமொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டனவாகவும், 1 உறுதிமொழி பரிந்துரை செய்யப்பட்டதாகவும், எஞ்சியுள்ள 102 உறுதிமொழிகளை நிலுவையில் வைத்து பிறிதொரு நாளில் ஆய்வு செய்யலாம் எனவும் குழு முடிவு செய்துள்ளது.

4. மேற்சொன்ன கூட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழுவின் பரிந்துரை இணைப்பு–2 இல் உள்ளது. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

பொதுக் குறிப்புரை

5. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009,
29, ஏப்ரல் 2008,
சித்திரை, 17
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்,
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழில் துறை

இணைப்பு – 1

திருவண்ணாமலை மாவட்டத்தில் கிரானைட் தொழிற்சாலை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	1
2.	துறையின் பெயர்	தொழில் துறை
3.	உறுதிமொழி எண்.	30 / 2006
4.	பொருள்	திருவண்ணாமலை மாவட்டத்தில் கிரானைட் தொழிற்சாலை அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் நாள்	62263 18.01.2006
6.	உறுப்பினர் பெயர்	திரு. கு. பிச்சாண்டி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. நமினார் நாகேந்திரன், தொழில்துறை அமைச்சர். ... திருவண்ணாமலையில் அமைப்பதற்கு அரசு சிந்திக்கும்.
8.	துறையின் பதில்	தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) ஏற்கனவே இரண்டு கிரானைட் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. கிரானைட் பலகைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை மணலியிலும், கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை மாதேப்பள்ளியிலும் இயங்கி வருகிறது. மேலும் தற்போது ரூ. 20 கோடி செலவில் மணலியில் இயங்கி வரும் தொழிற்சாலையை நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து விரிவாக்கம் செய்ய தமிழக முதல்வர் அவர்களால் கடந்த சட்டசபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு தற்போது அத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் கிரானைட் தொழிற்சாலை தற்சமயம் அமைக்கும் உத்தேசம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.



தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

குறு விவசாயிகளுக்கு 65 வயதைத் தாண்டிய பிறகு உதவித்தொகை வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	2
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	118 / 1999 (ம) 138 / 1995
4.	பொருள்	குறு விவசாயிகளுக்கு 65 வயதைத் தாண்டிய பிறகு உதவித்தொகை வழங்குவது குறித்து.
5.	வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	19.04.1995
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்.
		... மாதம் 100 ரூபாய் அரசினுடைய உதவித்தொகை வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	தமிழ்நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக திட்டங்களை பரிந்துரை செய்யும் பொருட்டு, திரு.பி.கோலப்பன், அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு வழங்கிய பரிந்துரைகளில், தற்போது வழங்கப்படும் முதியோர்களுக்கான ஓய்வூதியத்தை ரூ.100/- லிருந்து ரூ.200/-ஆக உயர்த்த வேண்டுமென்பதும், இந்த ஓய்வூதியம், மகன்/மகள் இருப்பினும் 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பதுமாகும். கோலப்பன் குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்து அமல்படுத்துவது தொடர்பாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முன்னாள் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவது தொடர்பான பரிந்துரையைப் பரிசீலித்து முதியோர் ஓய்வூதியத் தொகை 01.04.1998 முதல் ரூ.100/-லிருந்து, ரூ.150/-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், 2000-2001 ஆம்

ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, இத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.200/–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், சமூக நலத்துறை தெரிவித்ததன்பேரில் இப்பரிந்துரைகளின் மேல், மேல் நடவடிக்கைத் தேவையில்லை என உயர்மட்டக் குழு கருத்து தெரிவித்தது. இந்நிலையில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம் 2006 Tamil Nadu Agricultural Labourers - Farmers Social Security and Welfare Act 2006) 18.09.06–இல் வருவாய்த் துறையால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 3 (2) (g) –இல் முதியோர் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.400/–வீதம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 07.01.2008

10. குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கல்வித்துறையில் வேலை வாய்ப்பு இல்லாவிட்டாலும், மாற்றுத் துறையிலாவது கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு ஓராண்டிற்குள் வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	3
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	423 / 1997
4.	பொருள்	கல்வித்துறையில் வேலை வாய்ப்பு இல்லாவிட்டாலும், மாற்றுத் துறையிலாவது கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு ஓராண்டிற்குள் வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	2752
	நாள்	04.04.1997
6.	உறுப்பினர் பெயர்	திரு.கே.ஆர்.ஜி. தனபாலன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர். ... அந்தக் கருத்தும் இணைக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	கருணை அடிப்படையிலான நியமனங்களுக்கான தடையாணை உத்தரவு நீக்கப்பட்டு, அந்தந்த துறைகளில் கருணை அடிப்படையில் நியமனம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு துறையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய காலிப் பணியிடங்கள் இல்லை என்றால் மாற்றுத் துறைகளில் அவர்களுக்கு பணி நியமனம் வழங்க அரசு ஆணை (நிலை) எண்.216, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:15.11.2007–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

அரசுத் துறைகளின் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரரை கருணை அடிப்படையில் உடனடியாக பணியமர்த்துவது குறித்து.

1. வரிசை எண்.	4
2. துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	596 / 1997
4. பொருள்	அரசுத் துறைகளின் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரரை கருணை அடிப்படையில் உடனடியாக பணியமர்த்துவது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்.	1947
நாள்	22.04.1997
6. உறுப்பினர் பெயர்	திரு. செங்கை சிவம்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. இராகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
8. துறையின் பதில்	பணியில் இருக்கும்போது இறக்க நேரிடும் அரசு ஊழியர்களின் வாரிசுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய அரசு ஊழியரின் இறந்த தேதியையே முதுநிலையாக எடுத்துக்கொள்ளலாம். இது குறித்து அரசாணை நிலை எண்.135/ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள்: 04.10.2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

பீடி தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ.50,000 காப்பீடு செய்ய வேண்டிய அவசியம் குறித்து.

1.	வரிசை எண்.	5
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	576 / 1999
4.	பொருள்	பீடி தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ.50,000 காப்பீடு செய்ய வேண்டிய அவசியம் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	10728
	நாள்	25.03.1999
6.	உறுப்பினர் பெயர்	திரு. கே. ரவி அருணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. இராகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... இது குறித்து பீடி தொழிலாளர்களிடத்திலேயும் பல்வேறு சங்கங்களிடத்திலேயும் பேசி இதை அமல்படுத்த மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை கூறிக்கொள்கிறேன்.
8.	துறையின் பதில்	இவ்வறுதிமொழி தொடர்பாக அப்போதைய மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இதரப் பிரிவினரிடையே 10.11.2000 அன்று ஒரு கூட்டத்தை நடத்தினார். அக்கூட்டத்தின்போது உச்ச நீதிமன்ற தீர்ப்பின்/ கட்டளையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.50,000/– காப்பீடு செய்ய வேலையளிப்போர் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், வேலையளிப்போர் பிரதிநிதிகள் இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களை எடுத்துரைத்து தங்களால் ரூ.50,000/– காப்பீடு செய்ய இயலாத நிலையைத் தெரிவித்தனர். அமைச்சர் அவர்கள் இது குறித்து விரிவாக பரிசீலிக்க ஏதுவாக வேலையளிப்போர், தொழிற்சங்கம் மற்றும் அரசுப் பிரதிநிதிகளை உள்ளிட்ட குழு ஒன்றை அமைத்து அக்குழு 30.11.2000–க்குள் அறிக்கை அளிக்க

வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்படி 22.11.2000 அன்று தொழிலாளர் ஆணையர் அவர்கள் முன்பாக ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

அப்போது வேலையளிப்போர் பிரதிநிதிகள் ஏற்கனவே தெரிவித்த கருத்துக்களையே மீண்டும் வலியுறுத்தி பீடித் தொழிலாளர்களுக்கு ரூ.50,000/–க்கு காப்பீடு செய்வது சாத்தியமல்ல என்று தெரிவித்தனர். இது குறித்து எழுத்து மூலமான அறிக்கையும் கொடுத்தனர். மேலும், பீடித் தொழிலாளர்களுக்கு கீழ்கண்ட இரண்டு காப்புறுதித் திட்டங்கள் மத்திய அரசால் ஹைதராபாத்திலுள்ள தொழிலாளர் நல அமைப்பு மூலம் செயல்படுத்தப்படுகிறது.

1. எம்ப்ளாயீஸ் டிபாசிட் லிங்க்டு இன்சூரன்ஸ் திட்டம்:–

இத்திட்டம் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தால் (இபிஎப்) செயல்படுத்தப்படுகிறது. வைப்பு நிதி சந்தா தொகை செலுத்தும் அனைத்து தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். தொழிலாளர்களின் சம்பளத்தில் 0.5% நிர்வாகத்தால் வைப்புத் தொகையாக மேற்படி திட்டத்திற்கு செலுத்தப்படுகிறது. இதிலிருந்து வேலை செய்யும் தொழிலாளி இறந்தால் அவரது வாரிசுகளுக்கு (Dependents) கீழ்கண்ட அடிப்படையில் தொகை கொடுக்கப்படுகிறது.

12 மாத சராசரி வைப்புத் தொகையில் ரூ.35,000/–க்கு மிகாமலும், வைப்புத் தொகை ரூ.35,000/–க்கு மேலிருந்தால் ரூ.60,000/–க்கு மிகாமலும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொழிலாளர் வைப்புநிதி நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது.

2. பீடித் தொழிலாளர்களுக்கான குரூப் இன்சூரன்ஸ் திட்டம்:–

இத்திட்டம் 01.04.1992 முதல் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசின் கீழ் இயங்கி வரும் தொழிலாளர் நல அமைப்பால் (Labour Welfare Organisation) ஹைதராபாத் நல ஆணையர் மூலம் செயல்படுத்தப்படுகிறது. தொழிலாளர் வைப்பு நிதி திட்டத்தின்கீழ் சேராத இதர பீடித் தொழிலாளர்களுக்கும் இத்திட்டம்

பொருந்தும். இதன்படி ஒரு தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் ரூ.3,000/–ம் விபத்து காரணமாக மரணமடைந்தால் ரூ.25,000/–மும் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கான சந்தாத் தொகை வருடத்திற்கு ரூ.27–ல் ரூ.13.50 பீடித் தொழிலாளர் சேமநல நிதியிலிருந்து ஹைதாரபாத் நல ஆணையாலும் மற்றும் ரூ.13.50 சோஷியல் செக்யூரிட்டி பண்டிலிருந்து எல்.ஐ.சி. நிறுவனத்தாலும் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில், புதுதில்லி உச்ச நீதிமன்றம், ரிட் மனு எண்.1262/1987–ல் அளித்த தீர்ப்பின் கட்டளை எண்.11–ல் பீடித் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் நிர்வாகம் ரூ.50,000/–க்கு காப்புறுதி செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் உச்ச நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பின் அமுலாக்கத்தினை கண்காணிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட "தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு" கூட்டங்களில் விவாதிக்கப்பட்டது. அப்போது பீடி நிறுவனத்தினர், பீடித் தொழிலாளர்களுக்கு மேற்கண்ட இரண்டு காப்புறுதி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால், உச்ச நீதிமன்ற கட்டளை எண்.11–ன்படி ஆயுள் காப்புறுதி திட்டம் தேவையில்லை எனத் தெரிவித்து அகில இந்திய ரீதியாக சட்ட வடிவமைப்பில் கொண்டு வந்தால், காப்புறுதி திட்டத்தை செயல்படுத்துவதாக கூறிவிட்டனர்.

எனவே, ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ள முன்வராததால், இத்திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை. இது குறித்து தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலம் புதுதில்லி, உச்ச நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	படித்துப் பதிவுச் செய்யப்பட்டது.

காகிதம் பொறுக்கும் தொழிலாளிக்கு மாத சந்தா ரூ.20/-ல் இருந்து ரூ.10/-ஆக குறைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	6
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	94 / 2000
4.	பொருள்	காகிதம் பொறுக்கும் தொழிலாளிக்கு மாத சந்தா ரூ.20/-ல் இருந்து ரூ.10/-ஆக குறைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	28613
	நாள்	06.03.2000
6.	உறுப்பினர் பெயர்	திரு. கே. சுப்பராயன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. இராமான்காள், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துவிட்டு நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு திரு.கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் பேப்பர் பொறுக்கும் தொழிலாளிகள் தகுந்த காரணத்தோடு மனு செய்தால் அரசு யோசிக்கும்.
8.	துறையின் பதில்	அரசாணை (நிலை) எண்.56, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 28.04.1999-ல் வெளியிடப்பட்ட 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் பிரிவு 15-ன்படி அமைப்புச்சாரா தொழிலாளர்கள் சந்தா ரூ.20/- ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டும். இது ரத்து செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 23.02.2001-ல் வெளியிடப்பட்ட 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சமூகப்பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தில் ஒரே தடவை பதிவு கட்டணம் ரூ.100/-என்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணம் இரண்டு ஆண்டுகளுக்கு

		ஒருமுறை ரூ.10/- என்றும் வசூலிக்கப்பட்டு வந்தது. தற்சமயம் அரசு அனைத்து நல வாரியங்களிலும் அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களிடமிருந்து நலவாரியங்களில் பதிவு செய்வதற்கு வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் ரூ.100/-ம் 2 ஆண்டுக்கு ஒருமுறை உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் ரூ.10/-ம் ரத்து செய்து அரசாணை (நிலை) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.2006-ல் ஆணையிட்டுள்ளது. மேலும் கட்டுமானத் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் ரூ.25/- புதுப்பித்தல் கட்டணம் ரூ.10/- அரசாணை (நிலை) எண்.91, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:01.09.2006-ல் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் அமைப்பு சாரா தொழிலாளர்களிடமிருந்து எவ்வித சந்தாத் தொகையும் நல வாரியங்களில் வசூலிக்கப்படவில்லை.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் டாக்டர் இல்லாத பஞ்சம் நீக்க நிரந்தர மருத்துவர்களை வைப்பது குறித்து.

1. வரிசை எண்.	7
2. துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	170 / 2000
4. பொருள்	ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் டாக்டர் இல்லாத பஞ்சம் நீக்க நிரந்தர மருத்துவர்களை வைப்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண்.	14329
நாள்	30.03.2000
6. உறுப்பினர் பெயர்	திரு. டி. மணி
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. இராகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
	... ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் பொறுத்தமட்டில், தொழிலாளர் பிரதிநிதிகள் மருத்துவமனைகளில் பணியாற்றுகிற பிரதிநிதிகள் அரசு பிரதிநிதிகள் எல்லோரும் கூட ஒரு கண்காணிப்பு குழு போடப்பட்டு நடைமுறை பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். மருத்துவர் பஞ்சம் எங்கு ஏற்பட்டாலும் அவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள்.
8. துறையின் பதில்	தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன் மற்றும் சிவில் சர்ஜன் பணி நிலையில் முறையே 448 மற்றும் 187 மருத்துவர்கள் உள்ளிட்ட மொத்தம் 635 மருத்துவப் பணியிடங்கள் உள்ளன.
	இவற்றில் அசிஸ்டெண்ட், சர்ஜன் மருத்துவர் பணி நிலையில் 437 மருத்துவர்களும் சிவில் சர்ஜன் பணி நிலையில் 180 மருத்துவர்களும் சேர்ந்து மொத்தம் 617 மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். சிவில் சர்ஜன் பணி நிலையில் 7 பணியிடங்களும் சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜன்

	பணி நிலையில் 11 பணியிடங்கள் மட்டுமே தற்போது காலியாக உள்ளன. மேற்படி பணியிடங்களும் பதவி உயர்வு, பணிமூப்பு மற்றும் அவ்வப்பொழுது ஏற்படும் வெற்றிட மருத்துவர் பணியிடங்களும் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகிறது.
குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.



அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	8
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	251 / 2001
4.	பொருள்	அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	829
	நாள்	14.09.2001
6.	உறுப்பினர் பெயர்	திரு. சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. அன்வர்ராஜா, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
		... கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்த பொருள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.
8.	துறையின் பதில்	அரசு ஆணை நிலை எண்.486, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 31.03.05–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து, 5 ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருக்கும் 60 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கும், 60 வயது பூர்த்தி அடையாமல் நோயின் காரணமாகவோ வேறு காரணமாகவோ அன்றாட வேலை செய்ய முடியாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கும், 2000–2001 ஆம் ஆண்டு முதல் மாதம் ரூ.200/– ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. தற்சமயம் இந்த ஓய்வூதியம் அரசு ஆணை (நிலை) எண்.90, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள்: 01.09.2006–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி மாதம் ரூ.300/– ஆக உயர்த்தப்பட்டு, 01.09.2006 முதல் வழங்கப்படுகின்றது.

மேலும், இவ் ஒய்வூதியத் திட்டம் அமைப்புச்சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள பிற அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, அரசு ஆணை நிலை எண்.75, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள்: 01.09.2006–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட தகுதியுடன் கூடிய அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஒய்வூதியமாக மாதம் ரூ.300/– 01.09.2006 முதல் வழங்கப்படுகின்றது. 01.07.2007 முதல் ரூ.400/–ஆக உயர்த்தி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

9. குழு ஆய்வு செய்த நாள் 07.01.2008

10. குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அலுவலகத்திற்கும் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கும் இண்டர்நெட்டுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	9
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	316 / 2003
4.	பொருள்	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அலுவலகத்திற்கும் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கும் இண்டர்நெட்டுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்துதல் குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	 23.04.2003
6.	உறுப்பினர் பெயர்	––
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. அன்வர்ராஜா, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர். ... வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அலுவலகத்திற்கும் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கும் ரூ.5.00 இலட்சம் செலவில் இண்டர்நெட்டுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	2003–2004 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் அரசாணை எண்.64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:22.05.2003–ல் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, ஆணையர் அலுவலகத்திற்கு மட்டும் ரூ.5 இலட்சம் செலவில் இண்டர்நெட்டுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்தி ஆணை வழங்கப்பட்டது. கணினி மற்றும் இதர பாகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசாணை எண்.73, தொழிலாளர் மற்றும்

	வேலைவாய்ப்புத் துறை, நாள்: 16.05.2005-ல் ரூ.10 இலட்சம் செலவில் 5 மண்டலப் பயிற்சி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு கணினி மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் (Photo copier) கொள்முதல் செய்ய அரசு ஆணை இடப்பட்டு இயந்திரங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் இண்டர்நெட் வசதி செயல்முறையில் உள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி கட்டுதல் குறித்து.

1.	வரிசை எண்.	10
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	317 / 2003
4.	பொருள்	திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி கட்டுதல் குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	23.04.2003
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.அ. அன்வர்ராஜா, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர். ... திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.40.00 இலட்சம் செலவில் மாணவர் விடுதி கட்டப்படும்.
8.	துறையின் பதில்	திருவண்ணாமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர் விடுதி கட்டுவதற்கு 2003–2004 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் அரசாணை எண்.65, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எஸ்.1) துறை, நாள்: 22.05.03–ல் ரூ.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இப்பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணி நிறைவு பெற்றுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

இரசாயன தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து.

1. வரிசை எண்.	11
2. துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	375 / 2005
4. பொருள்	இரசாயன தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து.
5. அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு	
நாள்	04.04.2005
6. உறுப்பினர் பெயர்	திரு.ஜே. ஹேமச்சந்திரன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.ப. அண்ணாவி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... உரிய நடவடிக்கை எடுக்கப்படும்
8. துறையின் பதில்	இரசாயன தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 அட்டவணை ஒன்றில் சேர்க்க அரசாணை (நிலை) எண்.183, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 13.09.2007–ல் முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மீது ஆலோசனைகளும்/ஆட்சேபனைகளும் பெறப்பட்டு பரிசீலித்துப் பின்னர் உறுதி செய்து இறுதி அறிவிக்கை வெளியிடப்படும்.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகா பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

1. வரிசை எண்.	12
2. துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	499 / 2005
4. பொருள்	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகா பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.
5. உடுக்குறியிடாத வினா எண்.	35516
நாள்	13.04.2005
6. உறுப்பினர் பெயர்	திரு.செ. வெங்கடாசலம்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.ப. அண்ணாவி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
	... இத்திட்டம் தற்போது பரிசீலனையில் உள்ளது
8. துறையின் பதில்	17.12.2004 நாளன்று நடைபெற்ற 129–வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகக் கூட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும், குறைந்தபட்சம், மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்றிலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மாதிரி மருத்துவமனை ஒன்றிலும் யோகா பிரிவை ஏற்படுத்தலாம் என்றும் அதற்கான முழுமையான செலவினை முதல் மூன்று ஆண்டுகளுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் ஏற்றுக்கொள்ளும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசு மருத்துவமனை ஒன்றில் யோகா பிரிவை ஏற்படுத்தலாம் என்றும் அப்பிரிவுக்கு அங்கீகரிக்கப்பட்ட யோகா மையத்தின் மூலமாக ஒரு பயிற்றுநரை ஆறுமாத காலத்திற்கு மாதந்தோறும் ரூ.3000/– என்று நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையில் (Fixed Remuneration) பணியமர்த்தலாம் என்றும், புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் தெரிவித்தது. அதன் அடிப்படையில் சென்னை,

அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒரு யோகா பிரிவை தொடங்குவதற்கான ஆணைகள் அரசாணை (டி) எண்.589, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 30.08.2006 மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி மருத்துவமனையில் "யோகாப் பிரிவு" 22.11.2006 முதல் செயல்பட்டு வருகிறது.

9. குழு ஆய்வு செய்த நாள் 07.01.2008

10. குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பனைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்துவது குறித்து.

1. வரிசை எண்.	13
2. துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	199 / 2006
4. பொருள்	பனைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்துவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
நாள்	31.07.2006
உறுப்பினர் பெயர்	
மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர். ... அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் காக்கப்படுவது உறுதி செய்யப்படும்.
துறையின் பதில்	அரசாணை (நிலை) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:01.09.2006–ன்படி பனைமரத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அவ்வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு விபத்து மரணம் மற்றும் இயற்கை மரணம், விபத்து, ஈமச்சடங்கு, திருமணம், கல்வி, மகப்பேறு, கண்கண்ணாடி ஆகியவற்றிற்காக உதவித்தொகை மற்றும் ஓய்வூதியம் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.
குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியம் மீண்டும் திருத்தி அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	14
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	489 / 2006
4.	பொருள்	தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியம் மீண்டும் திருத்தி அமைப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை மானிய கோரிக்கையின் மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
		... இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது
8.	துறையின் பதில்	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அரசாணை (நிலை) எண்.70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 11.04.2007–ல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

ஆட்டோ ரிக்ஷா, முடித்திருத்துவோர், பனைமரத் தொழிலாளர், தையல் தொழிலாளர், கைவினை தொழிலாளர், ஓவியர், காலணி மற்றும் தோல் பதனிடுவோர், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு செய்யும் தொழிலாளர் மற்றும் பொற்கொல்லர் நல வாரியங்கள் இந்த ஆண்டு முதல் செயல்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	15
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	490 / 2006
4.	பொருள்	ஆட்டோ ரிக்ஷா, முடித்திருத்துவோர், பனைமரத் தொழிலாளர், தையல் தொழிலாளர், கைவினை தொழிலாளர், ஓவியர், காலணி மற்றும் தோல் பதனிடுவோர், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு செய்யும் தொழிலாளர் மற்றும் பொற்கொல்லர் நல வாரியங்கள் இந்த ஆண்டு முதல் செயல்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... இந்த ஆண்டு முதல் செயல்படும்.
8.	துறையின் பதில்	அரசாணை (நிலை) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:01.09.2006–ன்படி ஆட்டோ ரிக்ஷா, முடித்திருத்துவோர், பனைமரத் தொழிலாளர், தையல் தொழிலாளர், கைவினை தொழிலாளர், ஓவியர், காலணி மற்றும் தோல் பதனிடுவோர், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு செய்யும் தொழிலாளர்களுக்கு தனித்தனி வாரியங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் அரசாணை (நிலை) எண்.74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.2006–ல் தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் தனியே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளுக்கு கூடுதல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	16
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	496 / 2006
4.	பொருள்	அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளுக்கு கூடுதல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	––
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... தளவாடங்கள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	அரசாணை (நிலை) எண்.98, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:05.09.2006–ன்படி அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளுக்கு கூடுதல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்குவதற்கு ரூ.305 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கொள்முதல் ஆணை அனுப்பப்பட்டு கொள்முதல் செய்து தளவாடங்கள் வழங்கப்பட்டு வருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர் துறையின் முத்திரை ஆய்வாளர்களுக்கு தராசுகளுக்கு பதிலாக முதற்கட்டமாக 10 மின்னணு தராசுகள் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	17
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	497 / 2006
4.	பொருள்	தொழிலாளர் துறையின் முத்திரை ஆய்வாளர்களுக்கு தராசுகளுக்கு பதிலாக முதற்கட்டமாக 10 மின்னணு தராசுகள் வழங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... மின்னணு தராசுகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது தொழிலாளர் துறையின் முத்திரை ஆய்வாளர்களுக்கு தராசுகளுக்கு பதிலாக முதற்கட்டமாக 10 மின்னணு தராசுகள் வழங்கப்படும் என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் உறுதியளித்தார். ரூ.25 லட்சம் செலவில் 10 செட் மின்னணு செயல்முறை தராசுகள் வாங்குவது தொடர்பாக அரசாணை எண்.596, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:05.09.2006 மூலம் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு ஆணை (வாலாயம்) எண்.22, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 23.01.07–ல் கொள்முதல் குழு அமைக்கப்பட்டு அதன்படி 10 மின்னணு தராசுகள் ரூ.15,28,458/– செலவில் வாங்கப்பட்டு முத்திரை ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை 2006–2007 இறுதி திருத்திய மதிப்பீட்டில் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தொழிற்சாலை தலைமை ஆய்வாளர் அலுவலகம் மற்றும் 17 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய கணினி வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	18
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	498 / 2006
4.	பொருள்	தொழிற்சாலை தலைமை ஆய்வாளர் அலுவலகம் மற்றும் 17 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய கணினி வழங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... புதிய கணினிகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	தொழிற்சாலைகள் ஆய்வகத்துறைக்கு அரசாணை எண்.105, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 06.09.2006–ன்படி 10 கணினிகள் மற்றும் 1 UPC வாங்க ரூ.6,50,000/–க்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி கணினிகள் எல்காட் மூலம் வழங்கப்பட்டு இத்துறையின் சார்நிலை அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. அரசு ஆணை (நிலை) எண்.97, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 05.09.2006–ல் 17 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய கணினி கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டது. எல்காட் நிறுவனத்திற்கு முன்பணம் வழங்கப்பட்டது. கொள்முதல் ஆணை எல்காட் வழங்கியுள்ளது. தற்போது எல்காட் நிறுவனத்தால் திருப்பூர், கரூர் (மகளிர்),

ஆண்டிப்பட்டி (மகளிர்), நாமக்கல் (மகளிர்) நீடாமங்கலம், புல்லம்பாடி (மகளிர்), சங்கராபுரம், சிதம்பரம், திருவான்மியூர், திருக்குவளை, செக்கானூராணி, ஒசூர், சேலம் மற்றும் அம்பத்தூர் ஆகிய 14 தொழிற்பயிற்சி நிலையங்களில் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் கடலூர், அம்பத்தூர் (B.T.C) ராணிப்பேட்டை (B.T.C) தொழிற்பயிற்சி நிலையங்களிலும் கணினிகள் விரைவில் வழங்குமாறு எல்காட் நிறுவனம் வற்புறுத்தப்பட்டுள்ளதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

9. குழு ஆய்வு செய்த நாள் — 07.01.2008

10. குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மண்பாண்ட தொழிலாளர் நல வாரியம் என்ற தனி வாரியம் உருவாக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	19
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	499 / 2006
4.	பொருள்	மண்பாண்ட தொழிலாளர் நல வாரியம் என்ற தனி வாரியம் உருவாக்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... தனி வாரியம் உருவாக்கப்படும்.
8.	துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.06–ன் படி தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரியம் என்ற வாரியம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம், புதுப்பித்தல் கட்டணம், ரத்து செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	20
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	500 / 2006
4.	பொருள்	உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம், புதுப்பித்தல் கட்டணம், ரத்து செய்வது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... அறவே இரத்து செய்யப்படுகிறது
8.	துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.06–ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் ரூ.100/– மற்றும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் புதுப்பித்தல் கட்டணம் ரூ.10/– இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.91, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்:01.09.2006–ன் படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதவிக் கட்டணம் ரூ.25/– மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் புதுப்பித்தல் கட்டணம் ரூ.10/– ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இயங்கும் தையல் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	21
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	501 / 2006
4.	பொருள்	தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இயங்கும் தையல் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	––
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... உயர்த்தி வழங்கப்படும்
8.	துறையின் பதில்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் கீழ் இயங்கும் தையல் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.80/–லிருந்து, ரூ.150/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என 2006–2007 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார். அவ்வாறே இத்துறையின் அரசு ஆணை (டி) எண்.604, நாள்:11.09.2006–ன்படி தையற்பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ரூ.80/–லிருந்து, ரூ.150/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் பதிவு செய்து கொள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	22
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	502 / 2006
4.	பொருள்	அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் பதிவு செய்து கொள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர், ... வழங்கப்படும்
8.	துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.75, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.06–ல் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான நலவாரியம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு ரூ.300/– மாத ஓய்வூதியம் வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.200/– மாத ஓய்வூதியத்தை ரூ.300/–ஆக உயர்த்தி, அரசு ஆணை (நிலை) எண்.90, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.2006–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 01.07.2007 முதல் ரூ.400/– ஆக உயர்த்தி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு உடலுழைப்பு நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை உயர்த்தி வழங்குவது குறித்து.

1. வரிசை எண்.	23
2. துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3. உறுதிமொழி எண்.	503 / 2006
4. பொருள்	தமிழ்நாடு உடலுழைப்பு நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை உயர்த்தி வழங்குவது குறித்து.
5. 2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	12.08.2006
6. உறுப்பினர் பெயர்	
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... உயர்த்தி வழங்கப்படும்
8. துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.76, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.06–ல் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட நல வாரியங்களில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு குழந்தைப் பேற்றுக்காக (Delivery) மாதம் ரூ.1,000/– என்ற வீதத்தில் ஆறு மாதங்களுக்கு ரூ.6,000/– வழங்கவும், கருச்சிதைவு மற்றும் கருக்கலைப்புக்கு ரூ.3,000/– வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதே போன்ற மகப்பேறு உதவித் தொகைகளை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.93, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 01.09.2006–ல் ஆணையிடப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	24
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	806 / 2006
4.	பொருள்	படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	2029
	நாள்	21.08.2006
6.	உறுப்பினர் பெயர்	திரு. கோவை தங்கம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
		... அரசு பணிகளில் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
8.	துறையின் பதில்	இவ்வரசு பொறுப்பேற்றது முதல் 30.11.2007 வரை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 32,351 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர்கள் நலன் கருதி தொழிற்சாலைகளில் விபத்து பாதுகாப்பு நடவடிக்கைக் குறித்து கண்காணிக்க குழுக்கள் அமைக்கும் திட்டம் குறித்து.

1.	வரிசை எண்.	25
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	808 / 2006
4.	பொருள்	தொழிலாளர்கள் நலன் கருதி தொழிற்சாலைகளில் விபத்து பாதுகாப்பு நடவடிக்கைக் குறித்து கண்காணிக்க குழுக்கள் அமைக்கும் திட்டம் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	2777
	நாள்	21.08.2006
6.	உறுப்பினர் பெயர்	திரு. கி. ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... குழு அமைப்பது குறித்து அரசு விரைவில் பரிசீலிக்கும்
8.	துறையின் பதில்	பட்டாசு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்தும் பொருட்டு அரசு ஆணை நிலை எண்.130, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (எம்.2) துறை, நாள்: 20.09.2006-ல் பாதுகாப்பு பிரச்சாரக்குழு அரசால் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மதுரை, தொழிற்சாலைகள், இணை தலைமை ஆய்வாளர், அலுவலக தொழிற்சாலைகள், துணை தலைமை ஆய்வாளர் (பதிவு) தலைமையில் பாதுகாப்பு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சிவகாசி மற்றும் விருதுநகர் பகுதியில் உள்ள பட்டாசு தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர், தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள், துணை தலைமை ஆய்வாளர் வாரம் ஒருமுறை சென்று இத்தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும், பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவது குறித்தும், பாதுகாப்பற்ற செயல்களை தவிர்ப்பது குறித்தும், தொழிலாளர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் முகாம்கள் நடத்தி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பட்டாசு தொழிற்சாலைகளில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை அச்சடித்து, கையேடுகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பாதுகாப்பு பிரச்சாரக் குழு செயல்பட்டு வருகின்றது.

9. குழு ஆய்வு செய்த நாள் — 07.01.2008

10. குழுவின் கருத்து — நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMILNADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேலூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	26
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	483 / 2007
4.	பொருள்	வேலூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான நீதி, நிர்வாகம் மற்றும் சட்டத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	13.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.துரைமுருகன், பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்.
		... அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.166, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி2) துறை, நாள்: 10.08.2007–ல் வேலூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து நோயின் காரணமாக முடக்கமுற்று இயல்பான வேலை செய்வதற்கு தகுதியற்ற 60 வயது பூர்த்தி அடையாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகை உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	27
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	620 / 2007 & 621 / 2007
4.	பொருள்	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து நோயின் காரணமாக முடக்கமுற்று இயல்பான வேலை செய்வதற்கு தகுதியற்ற 60 வயது பூர்த்தி அடையாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகை உயர்த்துவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	––
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... ரூ.300/–லிருந்து, ரூ.400/–ஆக உயர்த்தப்படும்.
8.	துறையின் பதில்	அரசு ஆணை (டி) எண்.492, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள்: 28.06.2007–ல் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து 5 வருடங்களுக்கு குறையாமல் பதவியிலிருக்கும் 60 வயதினைப் பூர்த்தி செய்த கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் நோயின் காரணமாக முடக்கமுற்று இயல்பான வேலை செய்வதற்கு தகுதியற்ற 60 வயது பூர்த்தியடையாத தொழிலாளர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.300/–ஐ ரூ.400/–ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவது குறித்து.

1.	வரிசை எண்.	28
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	630 / 2007
4.	பொருள்	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... இந்த நலத்திட்டங்களை பெறுவதற்கான ஊதிய உச்சவரம்பு ரூ.7,500/-லிருந்து, ரூ.10,000/-ஆக உயர்த்தப்படும்.
8.	துறையின் பதில்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில், தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோருக்கு நலத்திட்டங்களை பெறுவதற்கான ஊதிய உச்சவரம்பு ரூ.7,500/-லிருந்து, ரூ.10,000/-ஆக உயர்த்தப்படும் என 2007–2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார். அவ்வாறே இத்துறையின் அரசு ஆணை (நிலை) எண்.87, நாள்:15.05.2007-ன்படி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல

	சந்தா செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோருக்கு நலத்திட்டங்களை பெறுவதற்கான ஊதிய உச்சவரம்பு ரூ.7,500/– லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.



தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்களின் இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் குழந்தைகளுக்கு புத்தக உதவித்தொகை வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	29
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	631 / 2007
4.	பொருள்	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்களின் இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் குழந்தைகளுக்கு புத்தக உதவித்தொகை வழங்குவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	 19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... ரூ.250/–மற்றும், ரூ.300/–வீதம் வழங்கப்பட்டு வரும் இத்தொகை முறையே ரூ.500/– மற்றும் ரூ.750/–ஆக உயர்த்தப்படும்.
8.	துறையின் பதில்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு, தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்களின் இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் குழந்தைகளுக்கு புத்தக உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ.250/– மற்றும் ரூ.300/– வீதம் வழங்கப்பட்டு வரும் இத்தொகை முறையே ரூ.500/– மற்றும் ரூ.750/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என 2007–2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.

	அவ்வாறே இத்துறையின் அரசு ஆணை(டி) எண்.355, நாள்: 15.05.2007–ன்படி தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இளநிலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு புத்தக உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ.250/– மற்றும் ரூ.300/–ஐ, ரூ.500/–மற்றும் ரூ.750/–ஆக உயர்த்தி வெளியிடப்பட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய குழந்தைகள் காப்பகத்தில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாரம் 2 முட்டைகள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	30
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	632 / 2007
4.	பொருள்	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய குழந்தைகள் காப்பகத்தில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாரம் 2 முட்டைகள் வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 2 முட்டைகளுக்கு பதிலாக 3 முட்டைகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு, தொழிலாளர் நல வாரிய குழந்தைகள் காப்பகத்தில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டைகளுக்கு பதிலாக மூன்று முட்டைகளாக உயர்த்தி வழங்கப்படும் என 2007–2008ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார். அவ்வாறே இத்துறையின் அரசு ஆணை(டி) எண்.354, நாள்: 15.05.2007–ன்படி குழந்தைகள் காப்பகத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு வாரத்திற்கு இரண்டு முட்டைகளுக்கு பதிலாக மூன்று முட்டைகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

மதுரை மண்டலத்தின் கீழ் உள்ள 16 மாவட்டங்களைப் பிரித்து திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் உருவாக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	31
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	635 / 2007
4.	பொருள்	மதுரை மண்டலத்தின் கீழ் உள்ள 16 மாவட்டங்களைப் பிரித்து திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் உருவாக்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	 19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... மதுரை மண்டலத்தின் கீழுள்ள 16 மாவட்டங்களை பிரித்து திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஒரு மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் உருவாக்கப்படும்.
8.	துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.147, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 15.07.07–ல் உரிய ஆணை வெளியிடப்பட்டது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்தில்லா நிலை உருவாகிடவும், தொழிற்சாலை நிர்வாகங்கள் பாதுகாப்பு வழிமுறைகளை சிறப்பாக கடைபிடித்திடவும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.

1.	வரிசை எண்.	32
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	636 / 2007
4.	பொருள்	பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்தில்லா நிலை உருவாகிடவும், தொழிற்சாலை நிர்வாகங்கள் பாதுகாப்பு வழிமுறைகளை சிறப்பாக கடைபிடித்திடவும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	––
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... பட்டாசு தொழிற்சாலைகளுக்கென்று தனியாக வருடத்திற்கு 5 இலட்சத்திற்கு அதிகமான மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள் வருடத்திற்கு 2 இலட்சத்திற்கு அதிகமாகவும், 5 இலட்சத்திற்குள்ளாகவும் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் வருடத்திற்கு 2 இலட்சம் வரையில் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள் என்று வகைப்படுத்தி முறையே 15000, 12000, 10000 விலை மதிப்பில் வெள்ளிக் கேடயமாக பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில், விபத்துக்களை தவிர்த்திட சிறப்பாக செயல்படும் தொழிற்சாலைகளுக்கு தற்போது மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதே நோக்கில், பட்டாசு தொழிற்சாலைகளில்

விபத்தில்லா நிலை உருவாகிட இதற்கென விபத்தில்லாமல் இயங்கும் பட்டாசுச் தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்திட பிரத்யோகமான பட்டாசு தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விருதுகள் வழங்க அரசு ஆணை (நிலை) எண்.113, நாள்: 01.06.2007–ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில் விபத்தில்லா ஆண்டு (அதிக பட்ச மனித வேலை நேரத்தின் அடிப்படையில்) என்ற அடிப்படையில் பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படும் தொழிற்சாலைகள் கீழ்க்காணும் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டு விருதுகள் வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

குரூப் A வருடத்திற்கு 5 லட்சத்திற்கு அதிகமான மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள்

குரூப் B வருடத்திற்கு 2 லட்சத்திற்கு அதிகமாகவும் 5 லட்சத்திற்குள்ளாகவும் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள்

குரூப் C வருடத்திற்கு 2 லட்சம் வரையில் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள்

தீர்மானிக்கப்பட்டுள்ள விருதுகள் வழங்கப்படும் விவரம்:–

குரூப் A

ரூ.15,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் முதல் பரிசாகவும்
ரூ.12,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் இரண்டாம் பரிசாகவும்
ரூ.10,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் மூன்றாம் பரிசாகவும் வழங்கப்படும்.

குரூப் B

ரூ.15,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் முதல் பரிசாகவும்
ரூ.12,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் இரண்டாம் பரிசாகவும்
ரூ.10,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் மூன்றாம் பரிசாகவும் வழங்கப்படும்.

குரூப் C

ரூ.15,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் முதல் பரிசாகவும்
ரூ.12,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் இரண்டாம் பரிசாகவும்
ரூ.10,000/– மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் மூன்றாம் பரிசாகவும் வழங்கப்படும்.

3. மேற்படி விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் பட்டாசு தொழிற்சாலைகள் நிர்வாகத்தினரிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது. இவ்வகையில் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ரூ.1,11,000/– செலவினம் ஏற்படும்.

9. குழு ஆய்வு செய்த நாள் 07.01.2008

10. குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இரசாயன தொழிற்சாலைகளில் விபத்துக்களை கட்டுப்படுத்தி உயிரிழப்பினைத் தடுத்திடும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.

1.	வரிசை எண்.	33
2.	துறையின் பெயர்	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	637 / 2007
4.	பொருள்	இரசாயன தொழிற்சாலைகளில் விபத்துக்களை கட்டுப்படுத்தி உயிரிழப்பினைத் தடுத்திடும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர். ... தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர் (பதிவு) தொழிற்சாலைகள், ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்பு பிரசாரக் குழு சென்னை மற்றும் கோவையில் அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	சென்னையை அடுத்துள்ள மணலி, எண்ணூர் மற்றும் வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை, கடலூர் மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை ஆகிய இரசாயனத் தொழிற்சாலைகளிலும் கோவை மண்டல திருப்பூரில் உள்ள பின்னலாடைகள் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகள், ஈரோட்டில் உள்ள சாயப்பட்டறைகள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் விபத்துக்களைக் கட்டுப்படுத்தி, உயிரிழப்பினைத் தடுத்திடும் வகையில் சென்னை, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலக, துணைத் தலைமை தொழிற்சாலைகள்

	ஆய்வாளர் (பதிவு) மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்புப் பிரச்சாரக் குழு சென்னையில் ஒன்றும் கோவை, இணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலக, துணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் (பதிவு) மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்புப் பிரச்சாரக் குழு கோவையில் ஒன்றும் அமைத்து அரசு ஆணை நிலை எண்.164, நாள்: 08.08.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாணையில் பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்துவதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.2,50,000/– வீதம் இரண்டு குழுக்களுக்கும் மொத்தம் ரூ.5,00,000/– வழங்கலாம் என்றும் அடுத்து வரும் ஆண்டில் பானர்ஸ், ஸ்டிக்கர், கைப்பிரதிகள், எழுதுப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து செலவினம் ஆகியவற்றிற்கு ஒரு குழுவிற்கு ஒரு இலட்சம் வீதம் (தொடரும் செலவினம்) வழங்கலாம் என்றும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
9. குழு ஆய்வு செய்த நாள்	07.01.2008
10. குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர்களின் மருத்துவ வசதியினைக் கருத்திற்கொண்டு தொழிலாளரின் ஈட்டுறுதி திட்டம் செயல்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	34
2.	துறையின் பெயர்	தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	641 / 2007
4.	பொருள்	தொழிலாளர்களின் மருத்துவ வசதியினைக் கருத்திற்கொண்டு தொழிலாளரின் ஈட்டுறுதி திட்டம் செயல்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.
		... சிவகாசி புறநகர், தேவகோட்டை, புளியங்குடி, கடையநல்லூர், காரியாபட்டி, சிவகாசி–II, திருநெல்வேலி, அவினாசி மற்றும் கரூர் ஆகிய 9 புதிய இடங்களுக்கு விரிவுப்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	சிவகாசி புறநகர், தேவகோட்டை, புளியங்குடி, கடையநல்லூர், காரியாப்பட்டி, சிவகாசி–II, திருநெல்வேலி, அவினாசி மற்றும் கரூர் ஆகிய 9 புதிய இடங்களுக்கு விரிவுப்படுத்தப்படும் பொருட்டு அரசால் கீழ்கண்ட அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

எண்.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் விரிவு படுத்தப்பட்ட புறநகர் பெயர்	அரசாணை விபரம்
1	சிவகாசி II புறநகர்	அரசாணை (நிலை) எண்.116, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07
2	காரியாப்பட்டி புறநகர்	அரசாணை (நிலை) எண்.117, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07
3	திருநெல்வேலி புறநகர்	அரசாணை (நிலை) எண்.118, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07
4	தேவகோட்டை புறநகர்	அரசாணை (நிலை) எண்.119, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07
5	புளியங்குடி புறநகர்	அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07

6	கடையநல்லூர் புறநகர்	அரசாணை (நிலை) எண்.121, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 6.6.07
7	கரூர் புறநகர்	அரசாணை (நிலை) எண்.129, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 18.6.07
8	அவிநாசி புறநகர்	அரசாணை (நிலை) எண்.130, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 18.6.07
9	சிவகாசி புறநகர்	அரசாணை (நிலை) எண்.136, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கே.1) துறை, நாள்: 21.6.07

9. குழு ஆய்வு செய்த நாள் 07.01.2008

10. குழுவின் கருத்து நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வருவாய்த் துறை

மாவட்டத்தில் உள்ள அலுவலகம் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் போன்றவற்றில் வி.எச்.எப். நவீன தொலைத் தொடர்பு வசதி செய்து தருதல் குறித்து.

1.	வரிசை எண்.	35
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	141 / 1996 & 260 / 1998
4.	பொருள்	மாவட்டத்தில் உள்ள அலுவலகம் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் போன்றவற்றில் வி.எச்.எப். நவீன தொலைத் தொடர்பு வசதி செய்து தருதல் குறித்து.
5.	1998–1999 ஆம் ஆண்டிற்கான நில வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	17.04.1998
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர். ... அரசு பரிசீலிக்கும்
8.	துறைச் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளுடன் குழு நேரிடையாக கலந்துரையாடிய விவரம்	*அரசுச் செயலாளர்:–* தற்போது கடலோரப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த அலுவலகங்களிலும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் வி.எச்.எப். டவர்கள் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து இருக்கிறோம். *தலைவர்:–* அரசுச் செயலாளர் அவர்கள் வி.எச்.எப். டவர்கள் கடலோர மாவட்ட அலுவலகங்களில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதாக தெரிவிக்கிறார்கள்.
9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

வெள்ளத்தினாலும், நெருப்பினாலும் வீடுகள் இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1000/– உதவித் தொகையிலிருந்து அதிகமாக உயர்த்தி ரூ.3000/–மாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	36
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	145 / 1996
4.	பொருள்	வெள்ளத்தினாலும், நெருப்பினாலும் வீடுகள் இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.1000/– உதவித் தொகையிலிருந்து அதிகமாக உயர்த்தி ரூ.3000/–மாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.
5.	வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	03.08.1996
6.	உறுப்பினர் பெயர்	திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர். ... நிதி அமைச்சர் கலைஞர் அவர்கள் ஆராய்வார்கள்.
8.	துறையின் பதில்	இதுவரை நெருப்பு மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணமாக சென்னை, நகரினை பொருத்தவரையில் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.300/–ம், முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.600/–ம் இதர மாவட்டங்களில் முறையே ரூ.250/–ம் மற்றும் ரூ.500/–ம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது 12.06.1996 முதல் மாநிலம் முழுவதுமாக எந்தவித பாகுபாடின்றி முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.500/ 600/– லிருந்து, ரூ.1000/–ஆகவும், பகுதியாக பாதிக்கப் பட்ட குடிசைகளுக்கு ரூ.250/ 300–லிருந்து, ரூ.500/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை மீண்டும் உயர்த்தி வழங்க தற்போது தேவையில்லை என்று கருதப்படுகிறது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் குறித்து.

1.	வரிசை எண்.	37
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	262 / 1998 (ம) 136 / 1999
4.	பொருள்	நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் குறித்து.
5.	1998–1999 ஆம் ஆண்டிற்கான நில வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	17.04.1998
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர். ... இப்பணிகளை விரைவில் முடித்து நில உரிமைப் பதிவேடுகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	1. நில உரிமைப் பதிவேடு திட்டம் முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. முதல் கட்ட ஒன்பது மாவட்டங்களில் பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டு விட்டது. இரண்டாம் கட்டமாக 7 மாவட்டங்களில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. 2. எஞ்சிய 13 மாவட்டங்களில் நில உரிமைப் பதிவேடு திட்டம் விரிவுபடுத்தும் பொருட்டு அரசாணை நிலை எண்.215, வருவாய்த் துறை, நாள்: 02.05.2000–ல் ஆணை வெளியிடப்பட்டது. 3. நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டத்தில் இரண்டாம் கட்ட வேலையில் கணினி மூலம் தயாரித்து வழங்க முடிவு செய்யப்பட்டது. இப்பணி 'எல்காட்' நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்காக ரூ.18.93

கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.10 லட்சம் விடுவிக்கப்பட்டது. ஆரம்பகால பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நிலப்பதிவேடுகளை கணினி மயமாக்கும் 'தமிழ்நிலம்' என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி தற்போது மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில், 201 வட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது கையினால் எழுதப்பட்ட நில உரிமை பதிவேடு வழங்குவதை தடை செய்து நில பதிவுருக்களின் நகல் கணினி மூலம் பிரதி எடுத்து விண்ணப்பதாரர்களுக்கு ரூ.20/– கட்டணம் வசூலித்து வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 01.10.2003 முதல் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் கணிப்பொறி அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பொது மக்களிடையே மிக நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. சென்ற ஆண்டு மட்டும் 2003–2004 ஆம் ஆண்டு ரூ.2 கோடி இதன் மூலம் வசூலாகி உள்ளது. கையினால் எழுதப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் மாறுதல் செய்ய முடியாத நிலையில் (static) உள்ளது. ஆனால் கணினிமய திட்டத்தினால் நில மாற்றங்களை உடன் (Dynamic) செய்ய முடிவதால் நல்ல வரவேற்பு உள்ளது. கணினிமய திட்டத்திற்கேற்ப பட்டா பாஸ் புத்தக சட்டத்தில் உரிய மாற்றங்கள் செய்வதும் பரிசீலனையில் உள்ளது. சென்னை மாவட்டத்திலுள்ள ஐந்து வட்டங்களிலும் இவ்வாண்டு 2004–2005–ல் எல்லா நிலப்பதிவேடுகளை கணினி மயமாக்கத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது முடிக்கப்பட்ட பின் கணினி மயமான நிலப்பதிவுருக்களே வழங்கப்படும்.

9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

நிழற்பட அச்சகத்தை மேம்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	38
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	266 / 1998
4.	பொருள்	நிழற்பட அச்சகத்தை மேம்படுத்துதல் குறித்து.
5.	1998–1999 ஆம் ஆண்டிற்கான நில வருவாய்த் துறை, மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	
	நாள்	21.04.1998
6.	உறுப்பினர் பெயர்	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர். ... "லித்தோ" மற்றும் "லேசர்" அச்சு துறைகளை இந்த அச்சகத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	நில அளவைத் துறையால் தயாரிக்கப்பட்ட கிராமம், வட்டம், நகரம் மற்றும் மாவட்டம் ஆகியவற்றிற்கான வரைபடங்கள் கணினி வரைபட மையத்தில் (Computerized Cartographic Center) ஸ்கேன் செய்யப்பட்டு கணினி மூலம் வரைபடங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் நிழற்பட அச்சகப் பிரிவினை மேம்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.
9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

கரூர், திருவாரூர் மாவட்ட ஆட்சியர்கள் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து.

1.	வரிசை எண்.	39
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	36 / 2000
4.	பொருள்	கரூர், திருவாரூர் மாவட்ட ஆட்சியர்கள் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	31147
	நாள்	03.03.2000
6.	உறுப்பினர் பெயர்	திரு.ஐ. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு.நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர். ... அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு முறையை ரூ.560 இலட்சங்கள் மற்றும் ரூ.570 இலட்சங்கள் ஆகும். இப்பணி 31.07.2000-ல் முடிக்கப்படும்.
8.	துறையின் பதில்	கரூர் மற்றும் திருவாரூர் மாவட்டாட்சியர் அலுவலக கட்டிடங்களின் கட்டுமானக் பணிகள் முடிக்கப்பட்டு முறையே 25.06.2000 மற்றும் 27.08.2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றுவது குறித்து.

1.	வரிசை எண்.	40
2.	துறையின் பெயர்	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	158 / 2000
4.	பொருள்	பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றுவது குறித்து.
5.	2000–2001 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள்	29.03.2000
6.	உறுப்பினர் பெயர்	திரு.டி. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர். ... அதற்குப் பிறகு கூட ஒரு முறை பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதுவும் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு அனுமதி அங்கேயிருந்து கிடைக்கவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை அதுபற்றி முயற்சிக்கலாமா என்பதைப் பரிசீலிக்கலாம்.
8.	துறையின் பதில்	பினாமி நிலமாற்றங்கள் தொடர்பாக, தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு) சட்டம்) 1961, சட்டத்திற்கு சட்டத்திருத்தம் செய்யும் வகையில் சட்டமுன்வடிவு 37/91 மைய அரசுக்கு ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இச்சட்டத்திருத்தமானது நிலச்சீர்திருத்தச் சட்டம் இம்மாநிலத்தில் கொண்டு வரப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட நாளான 01.01.1958 முதல் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளான 06.04.1960 வரை பினாமி நில மாற்றங்களை இரத்து செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டது. நிலச்சீர்திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு 43 ஆண்டுகளுக்கு மேலாக முடிந்த நிலையில் தற்போது இச்சட்டம் முன்வடிவு தேவையில்லை எனக் கருதப்படுகின்றது.
9.	குழு ஆய்வு செய்த நாள்	08.01.2008
10.	குழுவின் கருத்து	படித்துப் பதிவுச் செய்யப்பட்டது.

நில அளவையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	41
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	384 / 2000
4.	பொருள்	:	நில அளவையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் குறித்து.
5.	வருவாய்த்துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	---
	நாள்	:	12.04.2000
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்
			...விண்வெளி சமிக்ஞையைக் கொண்டு அளவிடும் சிறப்பு அம்சம் பொருந்திய GLOBAL POSITIONING SYSTEM என்ற தொழில் நுட்பத்தைக் கண்டறிவதற்காக இந்த அரசு நில அளவை ஆணையர் வருவாய்த்துறைச் செயலாளர் ஆகிய அலுவலர் குழுவினை ஜெர்மனி நாட்டிற்கு அனுப்பி கண்டறியச் செய்து, இத்தகைய நவீன தொழில் நுட்பங்களை நில அளவை செய்வதற்கு பயன்படுத்தும் ஒரு சோதனைத் திட்டத்தினை நடப்பு ஆண்டில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.
8.	துறையின் பதில்	:	மாண்புமிகு முன்னாள் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் 12.04.2000 அன்று வருவாய்த்துறை, மானியக் கோரிக்கையின் போது செய்த இந்த உறுதிமொழிக்கு ஏற்ப விண்கோள் சமிக்ஞையைக் கொண்டு அளவிடும் சிறப்பம்சம் பொருந்திய GLOBAL POSITIONING SYSTEM தொழில் நுட்பத்துடன், கடாஸ்ட்ரல் நில அளவை மேற்கொள்ள ஒரு முன்னோடித் திட்டத்தினை ரூ.120.00 இலட்சம் செலவில் இம்மாநிலத்தில் முதற்கண் ஒரு வட்டத்தில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் செயல்படுத்த அரசு முடிவு செய்து இதற்கான செலவினை மத்திய அரசும்,

மாநில அரசும் 50:50 என்ற வீதத்தில் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் மைய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டது (கடித நிலை எண்.243, வருவாய், நாள்: 15.05.2000) மைய அரசு தனது 27.09.2000 நாளிட்ட கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் துல்லியமான நில அளவை முறையினை GLOBAL POSITIONING SYSTEM அறிமுகப்படுத்துவதற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான ரூ.120.00 இலட்சம் செலவினத்தை 50:50 என்ற விகிதத்தில் மைய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்ளும். மைய அரசின் உதவி பெறும் வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்துதல் (STRENGTHENING OF REVENUE ADMINISTRATION AND UPDATING OF LAND RECORDS SCHEME) திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்காக, மைய அரசின் 50 விழுக்காடு பங்கான ரூ.60.00 இலட்சம் தொகையினை மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள 50 விழுக்காடு செலவினம் மாநில அரசு ஏற்று இத்திட்டத்தை நடப்பு ஆண்டிற்குள் செயல்படுத்தும் வண்ணம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை (நிலை) எண்.565, வருவாய், நாள்: 03.11.2000) அவ்வாணையின் அடிப்படையில் செயல்முறை திட்டம் (ACTION PLAN) தயார் செய்து அனுப்புமாறு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் மற்றும் இயக்குநர் கோரப்பட்டுள்ளார்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

நில அளவை நடைமுறையில் நில அளவைக் கற்கள் நட்டு பராமரித்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	42
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	386 / 2000
4.	பொருள்	:	நில அளவை நடைமுறையில் நில அளவைக் கற்கள் நட்டு பராமரித்தல் குறித்து.
5.	வருவாய்த்துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	--
	நாள்	:	12.04.2000
6.	உறுப்பினர் பெயர்	:	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மானோகரன், வருவாய்த்துறை அமைச்சர்
			...அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புறம்போக்கு நிலங்களுக்கும், பட்டா நிலங்களுக்கும் இடையில் உள்ள எல்லைகளில் இனி நில அளவைக் கற்கள் நட்டு பராமரிக்கும் முறை மீள செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.
8.	துறையின் பதில்	:	வருவாய்த்துறை அமைச்சர் தலைமையில் 23.10.1980 அன்று நடைபெற்ற நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த போது புறம்போக்கு வளைவுகளிலும், உட்பிரிவுகளிலும் கற்கள் புதுப்பிக்கும் பணி தொடர வேண்டிய அவசியமில்லை என்ற செயற்குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் அரசு ஆணை எண்.480, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள்: 01.06.1985-ன்படி புறம்போக்கு வளைவுகளிலும் உட்பிரிவுகளிலும் கற்கள் புதுப்பிக்கும் பணி தொடர வேண்டிய அவசியம் ஏதுமில்லை என அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு வருவாய்த்துறை, அமைச்சர் அவர்கள் 2000 ஆம் ஆண்டிற்கான வருவாய்த்துறை மானிய கோரிக்கையின்போது "நில அளவை நடைமுறையில் புறம்போக்கு, மற்றும் பட்டா நிலங்கள் எல்லைகளை அடையாளம் காண புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களின் எல்லைகளில் நில அளவைக் கற்கள் நட்டு பராமரிக்கும் முறை வழக்கில் இருந்தது. ஆனால் இந்த நடைமுறை 1982 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது. இக்காரணத்தினால், நில அளவைக் களப் பணியாளர்கள் புறம்போக்கு நிலங்களையும், ஆக்கிரமிப்புகளையும் அடையாளம் காண்பதில் பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புறம்போக்கு நிலங்களுக்கும், பட்டா நிலங்களுக்கும் இடையில் உள்ள எல்லைகளில் இனி நில அளவைக் கற்கள் நட்டு பராமரிக்கும் முறை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்" என அறிவிப்பு செய்தார்கள்.

எனவே, புறம்போக்கு வளைவுகளில் கற்கள் நடவேண்டிய அவசியம் கருதி, புறம்போக்கு வளைவுகளில் மீண்டும் கற்கள் நட்டு பராமரிக்க வேண்டுமென அரசு ஆணை எண்.427, வருவாய்த்துறை, நாள்: 14.08.2000-இல் உத்தரவிடப்பட்டது. தற்போது கல்நடும் முறை நடைமுறையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

நில அளவை துறையில் தயாரிக்கப்படும் வரைபடங்கள் கணினிமயமாக்குதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	43
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	387 / 2000
4.	பொருள்	:	நில அளவை துறையில் தயாரிக்கப்படும் வரைபடங்கள் கணினிமயமாக்குதல் குறித்து.
5.	வருவாய்த்துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	12.04.2000
6.	உறுப்பினர் பெயர்	:	--
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மானோகரன், வருவாய்த்துறை அமைச்சர்
			...சென்னை நில அளவை மத்திய அலுவலகத்தில் ஒரு கணினி வரைபடமையம் Computerised Cantographic Centre தொடங்கப்பட்டு அங்கு தயாரிக்கப்படும் அனைத்து வரைபடங்களும் இனி கணினி மயமாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	மத்திய நில அளவை அலுவலகத்தில் கிராம வரைபடங்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம வரைபடங்களின் 50 முதல் 100 பிரதிகளை சேமித்து வைத்தால் அதிக இடம் தேவைப்படும். தேவையான கிராம வரைபடங்கள் உடனுக்குடன் எடுக்க இயலாது.
			எனவே, கிராம வரைபடங்களை குறைந்தமட்டில் பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டது. இதுவரை 26 மாவட்ட கிராம வரைபடங்கள் ஸ்கேன் செய்யப்பட்டுவிட்டன. இதன்மூலம் இடவசதி தாராளமயமாக்கப்படுகிறது. கணினி மூலம் கிராம வரைபடங்களை எளிதில் எடுக்கவும் அச்சடிக்கவும் இயலும். முன்பு வரைபடம் பெறுவதற்கு 2 அல்லது 3 நாட்களாகும். ஆனால் கணினி மூலம் 1/2 மணி நேரத்திற்குள் வரைபடம் பெற இயலும். வட்ட வரைபடங்கள் மற்றும் மாவட்ட வரைபடங்கள்

இவ்வலுவலக கணினி வரைபட மையத்தில் ஸ்கேன் செய்து அச்சிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது



நிலம் ஒருவருடைய பெயரிலும், பட்டா ஒருவருடைய பெயரிலும், சிட்டா இடங்களில் வாரிசுதாரர்கள் பெயரில் இருப்பதை முறையாக பெயர் மாற்றம் செய்து கணினியில் பதிவு செய்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	44
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	389 / 2000
4.	பொருள்	:	நிலம் ஒருவருடைய பெயரிலும், பட்டா ஒருவருடைய பெயரிலும், சிட்டா இடங்களில் வாரிசுதாரர்கள் பெயரில் இருப்பதை முறையாக பெயர் மாற்றம் செய்து கணினியில் பதிவு செய்தல் குறித்து.
5.	வருவாய்த்துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	12.04.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜீ. பழனிசாமி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மானோகரன், வருவாய்த்துறை அமைச்சர் ...மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டபின், 'தமிழ்நிலம்' மென்பொருளைக் கொண்டு பத்திரப்பதிவு விவரங்களின் அடிப்படையில் சிட்டா மற்றும் 'அ' பதிவேடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உட்பிரிவு ஏற்படும் இனங்களில் பூமியின் அனுபவத்தை பரிசீலித்து உட்பிரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அடங்கல் விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டு சிட்டா மற்றும் 'அ' பதிவேட்டின் சரிபார்க்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	08.01.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டும் கூட, ஆயிரக்கணக்கான பேர் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	45
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	390 / 2000
4.	பொருள்	:	ஏழை எளிய மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டும் கூட, ஆயிரக்கணக்கான பேர் நிலமற்றவர்களுக்கு தக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	வருவாய்த்துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	12.04.2000
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் கா. கிருஷ்ணசாமி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர் ... டாக்டர் அவர்கள் கருத்து பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசின் தரிசு நிலம் வழங்கும் சிறப்புத் திட்டம் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் செயலாக்கப்படுகிறது. அதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அரசாணை நிலை எண்.555, வருவாய்த் துறை, நாள்: 26.08.2006–இல் வெளியிடப்பட்டுள்ளது. 1. எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்களில் ஒப்படை 2. நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்களை வரன்முறைப்படுத்தி ஒப்படை செய்தல் 3. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலங்களை அரசின் செலவில் பண்படுத்துதல்/மேம்பாடு செய்தல்

இத்திட்டத்தில், பயனாளிகளைத் தேர்வு செய்வது ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இருக்கும் பொருட்டு, கிராம அளவிலான குழு மற்றும் கிராம சபைகள் மூலம் பயனாளிகளை தேர்வு செய்ய சில சிறப்பு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தில் உட்படும் நிலங்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் திட்டங்கள் மூலம் பண்படுத்தப்பட்டு விவசாயத்திற்குத் தகுதியானதாக மேம்படுத்தப்பட்ட பின்னரே பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதுவரை 1,60,671.48 ஏக்கர் நிலம், 1,37,995 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே உறுதிமொழியில் தெரிவித்தபடி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவசாயத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	46
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	941 / 2000 & 1089 / 2000
4.	பொருள்	:	விவசாயத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	33306
	நாள்	:	10.11.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. வை. சிவபுண்ணியம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. அ. இராகுமான்கான், வருவாய்த்துறை அமைச்சர் ... வாரியம் அமைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் முடிவடைந்துவிட்டன..... முதல்வர் அவர்கள் அது குறித்து முறையாக அறிவிப்பை சொல்வார்கள்.
8.	துறையின் பதில்	:	2001–ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வந்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – சமூக பாதுகாப்பு திட்டம் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அரசாணை (நிலை) எண்.561 வருவாய், நாள்: 03.10.2005–இல் கலைக்கப்பட்டு 2005–ஆம் ஆண்டில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதன்பின்னர், புதிய அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு (ம) நலம்) சட்டம், 2006 என்ற புதிய சட்டம் இயற்றப்பட்டு, இச்சட்டம் 22.12.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு (ம) நலம்) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு நல உதவிகள் தொடர்பான விரிவான விவரங்கள் அரசு ஆணை (நிலை) எண்.853, வருவாய்,

நாள்: 29.12.2006-ல் வெளியிடப்பட்டது. மேலும், மேற்படி திட்டத்தினை செவ்வனே செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தின் பிரிவு 5 (1) ன் கீழ் அரசு ஆணை (நிலை) எண்.42, வருவாய், நாள்: 18.01.2007-ல் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) வீட்டுவசதி) அவர்கள் தலைவராவார். மேலும் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியம் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டத்தினை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி மாற்றம் செய்வதில் ஏற்கனவே இருந்த தடை (Ban) நீக்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டும் அவை செயல்படுத்தப்படாமல் உள்ளது குறித்து.

1.	வரிசை எண்.	:	47
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	132 / 2001
4.	பொருள்	:	கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணி மாற்றம் செய்வதில் ஏற்கனவே இருந்த தடை (Ban) நீக்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டும் அவை செயல்படுத்தப்படாமல் உள்ளது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	989
	நாள்	:	25.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், வருவாய்த்துறை அமைச்சர் ... பணியை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்தமுடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்துவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு ஆணை (நிலை) எண்.534, வருவாய், நாள்: 14.08.2006-ல் வெளியிடப்பட்ட கலந்தாய்வு முறையில் செய்யப்படும் பொது மாறுதலுக்கான (Counseling) ஆணையினை 30.11.2006-க்குள் விரைந்து நடைமுறைப்படுத்துமாறு உரிய அறிவுரைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்குமாறு அரசு கடித எண்.39601/பணி-7(1) 06-2, வருவாய், நாள்: 16.11.2006-ல் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அறிவுரைக்கிணங்க சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் மாவட்ட ஆட்சியருக்கு கலந்தாய்வு முறையில் பணி மாறுதல் மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	08.01.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்திலுள்ள பயனற்றுக்கிடக்கும் புறம்போக்கு நிலங்களில் ஏரி, குளங்கள் போக ஏழை எளியவர்கள் வீடுகட்டி வசித்து வரும் இடங்களை அரசு அந்த இடத்திற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்து பட்டா வழங்க அவர்களிடம் ஒப்படைக்க முன் வருமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	48
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	217 / 2004, 105 / 2005, 106 / 2005, 258 / 2005, 263 / 2005, 559 / 2005, 1049 / 2006, 1950 / 2006, 386 / 2007
4.	பொருள்	:	தமிழகத்திலுள்ள பயனற்றுக்கிடக்கும் புறம்போக்கு நிலங்களில் ஏரி, குளங்கள் போக ஏழை எளியவர்கள் வீடுகட்டி வசித்து வரும் இடங்களை அரசு அந்த இடத்திற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்து பட்டா வழங்க அவர்களிடம் ஒப்படைக்க முன் வருமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	6525
	நாள்	:	29.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. ஆர்.டி. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ... அரசு ஆய்வு செய்யும்
8.	துறையின் பதில்	:	பத்தாண்டுகளுக்கு மேல் அரசு நிலங்களில் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கு அவற்றை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம் அரசாணை (நிலை) எண்.168, வருவாய்த்துறை, நாள்: 27.03.2000-இல் வெளியிடப்பட்டது. இத்திட்டம் ஒருமுறை மட்டும் செயல்படுத்தும் சிறப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு 31.03.2001 உடன் முடிவடைந்தது. அதனைத் தொடர்ந்து தற்போதைய அரசு பத்தாண்டுகளுக்கு மேல் அரசு நிலங்களில் வீடுகட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலங்களை

புலத்தணிக்கைச் செய்து, வீட்டுமனைப்பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த அரசாணை (நிலை) எண்.854 வருவாய்த்துறை, நாள்: 30.12.2006–இன் மூலம் ஒரு சிறப்புத் திட்டத்தை வெளியிட்டது. இத்திட்டத்திற்கென அரசாணை (நிலை) எண்.498, வருவாய்த்துறை, நாள்: 05.09.2007–இல் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட்டது. மேலும், இவ்வரசாணையில் இத்திட்டம் 31.03.2008 வரை நீட்டிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் அறிவித்த அறிவிப்புகளுக்கிணங்க அரசாணை (2டி) எண்.711, வருவாய்த்துறை, நாள்: 30.11.2007–இல், இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் வீட்டுமனை பட்டா பெறுபவர்கள் அனைவருக்கும் வருமான உச்சவரம்பின்றி இலவசமாக வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்றும், கிராமப்புறங்களில் நான்கு சென்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் இரண்டரை சென்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு சென்ட் வரையிலும் இலவசமாக வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என்றும், இந்தச் சிறப்புத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற மனைக்கிரயம் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் 30.12.2006 முதல் செலுத்திய தொகை அவர்களுக்கே திரும்ப வழங்கப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 08.01.2008

